<u>DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

Case No. : D. V. C. No. 6/2024

Prosecution Witness : P. W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : சோனியா | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 06/08/2025

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

நான் மனுவில் சொல்லியது போல் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முயற்சி எடுத்தேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் என் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். எந்த வகையில் உறவு என்றால், என் தாத்தாவின் தம்பியுடைய பேரன் ஆவார். திருமணத்திற்கு முன்பே உறவினர் என்ற முறையில் சந்தித்திருக்கிறேன் என்றால், வருடத்திற்கு ஒரு முறை சந்தித்திருக்கிறேன். பத்தாம் வகுப்பு படிக்கும் வரை நன்றாக பழகியிருக்கிறேன். குடும்ப நிகழ்ச்சிகளில் இரு குடும்பமும் சந்தித்திருக்கிறோம் என்றால், என் அம்மா மட்டும் அவர்கள் குடும்ப விழாவில் கலந்து கொண்டிருக்கிறார்கள். 1ம் எதிர்மனுதாரர் பெரிய தங்கை பெயர் கோகிலாவின் திருமணத்தில் நான் கலந்து கொண்டேனா என்றால், 10ம் வகுப்பு படிக்கும் போது கலந்து கொண்டேன்.

1ம் எதிர்மனுதாரர் 2022ம் ஆண்டு என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் குடும்ப நல மனு எண்.123/2022 தாக்கல் செய்திருக்கிறார் என்றால், சரிதான். அந்த வழக்கில் எனக்கு அழைப்பாணை வந்து அதில் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

சரிதான். அந்த வழக்கில் பதிலுரை இதுநாள் வரை தாக்கல் செய்யயவில்லை என்றால், தெரியவில்லை. அதில் இடைக்கால ஜீவனாம்ச மனு தாக்கல் செய்திருக்கிறனே் என்றால் சரிதான். அந்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குடும்ப நல மனு எண்.123/2022 அனுமதிக்கப்படும் பட்சத்தில் அவருடன் சேர்ந்து வாழ எனக்கு ஆட்சேபனை இருக்கிறதா என்றால், இருக்கிறது. சேர்ந்து வாழ விருப்பமில்லை. என்னை அவருடன் சேர்த்து வைக்கும் படி கோரி மனு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர்கள் மீது காவல் நிலையத்தில் எத்தனை புகார்கள் இதுவரை கொடுத்திருக்கிறேன் என்றால், 4 முதல் 5 கொடுத்திருப்பேன். எந்தெந்த காவல் நிலையத்தில் கொடுத்திருக்கிறேன் என்றால், சோழவரம், அம்பத்தூர், ஆவடி ஆணையர் அலுவலகம் ஆகியவற்றில் புகார் கொடுத்திருக்கிறேன். அனைத்து புகார்களிலும் 1ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் விசாரணைக்காக ஆஜரானார் என்றாலும், விசாரணை நடத்தப்பட்டது என்றாலும் சரிதான். மேற்படி புகார்களில் எதிலும் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் தரப்பில் போட்ட பதிலுரையை படித்துப் பார்த்தேனா என்றால், பார்த்தேன். சங்கதிகள் தெரிந்து கொண்டேன்.

நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார்களில் நானே விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்று அந்த பதிலுரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால், சொல்லப்பட்டுள்ளது. அது சரியான விவரமல்ல. பிரமாணத்தை என்னுடைய அறிவுரையின் படி தான் தயார் செய்தார்கள் என்றால், சரிதான். என்னுடைய பிரமாணத்தில் எதிர்மனுதாரர்கள் தங்கள் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகள் எதனையும் நான் மறுக்கவில்லை என்றால், சரிதான். திருமணத்திற்கு பின் திருநின்றவூர் ஏஜி நர்சிங் ஹோம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றால், சரிதான். மருத்துவமனை பெயர் தெரியவில்லை. மேற்படி மருத்துவமனை தவிர வேறு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன்

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

என்றால் சரிதான். எந்த மருத்துவமனை என்றால், அம்பத்தூர் ஸ்டெட் போர்டு மருத்துவமனை, காந்தி நகர் கீதா மருத்துவமனை, ஆந்திராவில் சூளுர் பேட்டையில் ஒரு மருத்துவமனைக்கு சென்று வந்தேன்.

திருமணத்திற்கு முன் வேறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சை பெற்றிருக்கிறேனா என்றால், இல்லை. தற்போது என்னுடன் யார் வசித்து வருகிறார்கள் என்றால், என் அம்மா, நான், மற்றும் தங்கை கோகிலா வசிக்கிறோம். என் தாயார் வீட்டு வேலை செய்து தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால், வீட்டு வேலையில்லை, கம்பெனியில் Housekeeping வேலை செய்தார்கள். என் தாயாருக்கு என்ன வயது என்றால், 55, 56 இருக்கும். எத்தனை கம்பெனிகளில் வேலை செய்தார்கள் என்றால், 2 ஆகும். என்னென்ன கம்பெனிகள் என்றால், Techno Fab and Nandini Industries ல் வேலை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA